**செய்தி வெளியீடு எண் : 541** **நாள்: 05.04.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.4.2022), பெலாக்குப்பம் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் காலணி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே !

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் அவர்களே !

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் ரவிக்குமார் அவர்களே !

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. புகழேந்தி அவர்களே !

டாக்டர் லட்சுமணன் அவர்களே !

திரு.சிவக்குமார் அவர்களே !

திரு. மணிகண்ணன் அவர்களே !

தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஆனந்த், ஐ.ஏ.எஸ்.,அவர்களே!

MEPZ சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டு ஆணையர் திரு. எம்.கே. சண்முகசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மோகன், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. ஜெயச்சந்திரன் அவர்களே !

செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை மேலாண்மை இயக்குநர் திரு. அருள் அவர்களே !

செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு. சுனில் அவர்களே !

அரசு உயர் அலுவலர்களே ! அதிகாரிகளே !

உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளே !

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே !

காவல்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய காவல்துறை அதிகாரிகளே! காவல்துறை தோழர்களே !
வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே!
என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும், உயிரான அன்பு உடன்பிறப்புக்களே,
உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அடிக்கல் நாட்டுவிழா. எனக்கு என்ன சந்தேகம் என்றால், இது அடிக்கல் நாட்டுவிழாவா? அல்லது தொழிற்சாலையினுடைய துவக்க விழாவா? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, அடிக்கல் நாட்டு விழா என்றால், ஒரு ஹாலில், ஒரு சின்ன அரங்கத்திற்குள், ஒரு 100 பேர், 200 பேரை கொண்டு அதிகாரிகள், முக்கியமான அலுவலகர்களை மட்டும் உட்கார வைத்து அடிக்கல் நாட்டு விழாவை நடத்துவதுண்டு. ஆனால் இது, ஏதோ பெரிய திறப்பு விழா நிகழ்ச்சியைப் போல அமைந்திருக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவுக்கே இந்தக் கூட்டம் என்று சொன்னால், இந்தப் பணிகள் எல்லாம் முடிந்து அதனுடைய திறப்பு விழா நடக்கிறபொழுது என்ன கூட்டம் வரும் அப்படியென்ற எண்ணம் தான் எனக்கு இப்பொழுது வந்திருக்கிறது.

அரசின் சார்பில் எத்தனையோ துறைகள் இருக்கிறது. நான் முதலமைச்சராக மக்களால், உங்களால் தேர்தெடுக்கப்பட்டு அந்தப் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு, நம்முடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, நான் அதிகம் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி எது என்று பார்த்தால், தொழில் துறையைச் சார்ந்த நிகழ்ச்சியில் அதிகமாக கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு காரணம் என்னவென்று கேட்டால், அந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய தங்கம் தென்னரசு அவர்கள். அவருக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையிலே, அவருக்கு துணை நிற்கக்கூடிய வகையிலே அவருடைய தொழில்துறையைச் சார்ந்த தொழில்துறையினுடைய செயலர் திரு. கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள். இரண்டு பேரும் போட்டிப் போட்டுக்கொண்டு, துபாய்க்கு போனாலும் சரி, டெல்லிக்குப் போனாலும் சரி

அல்லது MOU கையெழுத்து போடுவதாக இருந்தாலும் சரி, அதில் அவர்கள் காட்டக்கூடிய ஆர்வத்தைப் பார்த்து நானே மெய்மறந்து போயிருக்கிறேன். ஆகவே, எல்லாத் துறைகளிலும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அதிகம் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சி இந்தத் தொழில்துறையைச் சார்ந்த நிகழ்ச்சியாக அமைந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று. ஆகவே, அந்தப் பணியிலே ஈடுபட்டு அதில் வெற்றி காணுவதற்காக துடித்துக் கொண்டிருக்கக்கூடிய, பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையினுடைய செயலர் திரு.கிருஷ்ணன் அவர்களையும், அவர்களுக்குத் துணை நிற்கக்கூடிய அனைத்துத் தரப்பு அலுவலர்களையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட, போற்ற, அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, அனைத்துத் துறையும் வளரவேண்டும், அதுவும் அனைத்துத் துறையும் சமவிகிதத்தில் வளரவேண்டும் என்று நினைக்கக்கூடிய வகையில் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. அதனுடைய அடையாளம்தான் இன்றைய தினம் நான் அடுத்தடுத்து, ஏற்கனவே விழுப்புரம் மாவட்டத்தில் இன்னொரு பகுதியில் சமத்துவபுரம் என்கிற ஒரு நிகழ்ச்சியை அங்கு இருக்கக்கூடிய அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே தந்தை பெரியார் கண்ட கனவை, அறிஞர் அண்ணா எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, சமத்துவபுரம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி ஒற்றுமை உணர்வோடு, ஒருமித்த கருத்தோடு ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காக அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. எனவே அது போன்ற ஒரு சமத்துவபுரத்தை நான், அங்கே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை எல்லாம் திறந்து வைத்துவிட்டு, அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உரையாற்றிவிட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

'வீதியோரத்தில் வேலையற்றவர்கள் - வேலையற்றவர்களின் எண்ணத்தில் விபரீதங்கள்! இதுதான் வேந்தே காலத்தின் குறி" - என்று பேரறிஞர் அண்ணா

அவர்கள் ஒரு கவிதை நடையிலே, கட்டுரையிலே எழுதி சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த நிலையை மாற்றுவதற்கு உருவான இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம்.

கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், சமூகத் திறனில் நாம் யாருக்கும், எந்த மாநிலத்தவர்க்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில், தமிழக அரசு எண்ணற்ற திட்டங்களை எல்லாம் இன்றைக்கு தீட்டி, அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட நோக்கத்தை இலக்காகக் கொண்டிருக்கக்கூடிய நிறுவனங்களுக்கு முழு ஒத்துழைப்பை நம்முடைய அரசு வழங்கிக் கொண்டு வருகிறது. அந்த வகையில் நான் இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஃபெங் டே (Feng Tay) நிறுவனத்தின் துணை நிறுவனமாகிய செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல (SEZ) மேம்பாட்டு நிறுவனத்தினுடைய புதிய திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே துவக்கத்திலே வரவேற்புரை ஆற்றிய நண்பர், இந்தத் தொழிற்சாலையினுடைய இந்த தொழில் நிறுவனத்தினுடைய வரலாற்றை அவர் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த நிறுவனத்தினுடைய காலணிகள் தயாரிப்புத் திட்டத்திற்காக 2006-ஆம் ஆண்டு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. 2009-ஆம் ஆண்டில், செய்யாறு சிப்காட் பகுதியில் அதற்கான பணிகளை நான் அடிக்கல் நாட்டி அன்றைக்கு துவக்கி வைத்தேன். 300 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்றைய தினம் கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்தது மட்டுமில்லாமல், 35 ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பையும் கொடுத்திருக்கிறது. அதற்காக இந்த நிறுவனத்தை, அரசின் சார்பில், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

அதிலும் குறிப்பாக, 70 சதவீதத்திற்கு மேல் பெண்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய தனிப்பட்ட முறையில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யவும் இந்த நிறுவனம் திட்டமிட்டிருப்பதை அறிந்து நான் வரவேற்கிறேன்.

தலைவர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு - நான் அடிக்கல் நாட்டிய ஒரு நிறுவனம், 13 ஆண்டுகளில் இத்தகைய மாபெரும் வளர்ச்சி அடைந்திருப்பதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

சுற்றுப்புறத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதன் மூலமாக அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு வழியமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தி கொண்டு வந்திருக்கிறார்கள். சமூக அமைதியும் - தொழில் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று நான் சொல்வது இதன் அடிப்படையில்தான். அதனால்தான் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறோம். அத்தகைய தொழில்கள் ஒரே இடத்தில் குவியாமல் - தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டங்களில் அதிகம் உருவாக வேண்டுமென்று நினைக்கிறோம். அனைத்துத் துறைகளும் - அனைத்து மாவட்டங்களிலும் வளர வேண்டுமென்று நினைக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற இந்தப் பத்து மாத காலத்தில் தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான நிறுவனங்கள் வரத் தொடங்கியிருக்கிறது. தமிழ்நாடு அரசு அளித்துக் கொண்டிருக்கக்கூடிய ஊக்கத்தால், பல தொழில் நிறுவனங்கள் நம்முடைய தமிழ்நாட்டை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் தான், கார், கண்ணாடி, மின்னணுவியல் மற்றும் காலணி வரை பல தொழில்நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, அந்தத் தொழில் நிறுவனங்களையெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களே நேரடியாக வந்து துவக்கி வைத்திருக்கிறார். அவர் துவக்கி வைத்த பல திட்டங்களின் விரிவாக்கத் திட்டத்திற்கு தற்போது நான் அடிக்கல்

நாட்டிக் கொண்டிருக்கிறேன். இதுதான் ஒரு நல்ல ஆட்சியினுடைய அடையாளமாக, எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தோல் துறையில், ஒரு கோடி முதலீட்டிற்கு 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அத்துறையில் முதலீடுகள் அதிகரிக்க, அதிகரிக்க, வேலைவாய்ப்புகளும் அதிகரித்துக் கொண்டே போகும். இது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதோடு மட்டுமில்லாமல், மாநிலத்தின் உற்பத்திச் சூழலையும் வெகுவாக மேம்படுத்தும். நான் செல்லுகின்ற இடமெல்லாம், அதிக முதலீடுகளை பெற வேண்டும், தயாரிப்புகளை பல்வகைப்படுத்த வேண்டும், அதிக அளவில் விரிவாக்கம் மேற்கொள்ள வேண்டும், மதிப்புக் கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டு வருகிறேன், அதை நான் வழக்கமாக வைத்திருக்கிறேன். அவ்வாறே, இன்றும் நான் உங்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். தோல் ஒரு முக்கியமான பொருளாகத் தொடர்ந்திடும் அதே வேளையில், தோல் அல்லாத காலணிகள்தான் அடுத்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கிடும். அண்மையில், நைக் Nike போன்ற காலணித் தயாரிப்பாளர்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களாக வழங்கத் தொடங்கியுள்ளனர் என்று நான் அறிகிறேன். அவ்வாறே, தோல் அல்லாத துறைகளிலும் உங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து விரிவுபடுத்திடுமாறும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, செய்யாறு மற்றும் பர்கூரில் தொழிற் திட்டங்களை அமைத்திருக்கிற நீங்கள் இன்று, திண்டிவனத்தைத் தேர்ந்தெடுத்து உங்கள் திட்டத்தினை அமைக்க முன்வந்திருப்பதற்காக உங்கள் அனைவரின் சார்பில் இந்த நிறுவனத்திற்கும், இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம் என்பது விழுப்புரம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரம். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கக்கூடிய முக்கியமான சந்திப்பு இந்த திண்டிவனம் தான். ஆகவே, திண்டிவனத்தைப்

பொறுத்தவரைக்கும், உங்கள் திட்டத்திற்கான நல்ல போக்குவரத்து வசதிகள் இருக்கும். இங்கு அமைக்கப்பட இருக்கிற இந்தத் திட்டம் உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கான ஒரு மைல்கல்லாக அமைந்திட என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் உங்கள் திட்டங்களை தமிழ்நாட்டில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைத்து இருக்கிறீர்கள். இது எனக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆகவே, இந்த இனிய தருணத்தில், தமிழ்நாட்டில் மேலும் பல இடங்களில், குறிப்பாக தென் மாவட்டங்களிலும் புதிய திட்டங்களை அமைத்திடுமாறும், உங்களை நான் உரிமையோடு, அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான முதலீட்டுச் சூழலும் இங்கு வலுவாக இருக்கிறது.

காலணி உற்பத்தியில், தேசிய மற்றும் உலக அளவில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. தமிழ்நாட்டின் பங்களிப்பு, தேசிய காலணி உற்பத்தியில் 26 விழுக்காடாகவும், ஏற்றுமதியில் 45 விழுக்காடாகவும் இருக்கிறது. காலணி மற்றும் விளையாட்டிற்கு பயன்படுத்தப்படும் காலணிச் சந்தையைக் கைப்பற்ற, நம் மாநிலம் பெரும் வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது.

சமீபத்தில் தலைநகர் டெல்லியில் நான் சென்றிருந்தபோது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை நான் சந்தித்தபோது, அதிகரித்து வரும் காலணிகளுக்கான உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதித் தேவைகளை சமாளிக்க, தமிழ்நாட்டில் உள்ள உற்பத்திக் குழுமங்களை (Manufacturing clusters) பயன்படுத்தலாம் என்று தெரிவித்திருந்தேன். “உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை” (Production Linked Incentive) அந்தத் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் கோரிக்கை வைத்திருந்தேன்.

தமிழகத்திறகு என “தோல் மற்றும் காலணிக் கொள்கை” , விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. ஏற்கனவே, பல காலணி தயாரிப்பு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,

அத்துறையில், அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்திட முடியும் என்று நான் நம்புகிறேன்.

மோட்டார் வாகனத்துறை, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், பட்டாசு ஆலைகள், காலணி மற்றும் தோல் பொருட்கள் துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பெண்கள் பெருமளவில் பணிசெய்து வருகிறார்கள். சமூகநீதி மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் வகையில், “மகளிர் கொள்கை” ஒன்றை விரைவில் அரசின் சார்பில் நாங்கள் வெளியிட இருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 10 மாதங்களிலேயே, பெருமையோடு சொல்கிறேன், இதுவரை 68 ஆயிரத்து 375 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. 2 லட்சத்து 5 ஆயிரத்து 402 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. ஒன்றிய அரசின் தொழில் மற்றும் வர்த்தகத்துறை தன்னுடைய அறிக்கையில் அகில இந்திய அளவில், அன்னிய முதலீடு கடந்த ஆண்டை விட 16 விழுக்காடு குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கக்கூடிய அதே வேளையில், சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் ஈர்க்கப்பட்ட அன்னிய முதலீடுகளை விட, இந்த ஆண்டு ஈர்க்கப்பட்ட முதலீடுகள் 41.5 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது. இந்த வளர்ச்சி என்பது ஒரு மிகப் பெரிய சாதனை. இது இந்த நல்லாட்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு நல்ல பெயர்!

அகில இந்திய அளவில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் கூட, இந்திய அளவில் மாநிலங்களுக்கான பொருளாதார சுதந்திரத் தரவரிசையில், தமிழ்நாடு, பொருளாதார ரீதியாக இந்தியாவின் மிகவும் சுதந்திரமான மாநிலமாக தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது.

2030 - ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி பெறவேண்டும் என்கிற நமது அரசின் இலட்சிய இலக்கைப் பற்றி நான் தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறேன். இந்த

இலக்கினை அடைவதற்காக நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தப் பயணத்தில் எங்களுடன் பங்கேற்றிட வருமாறு முதலீட்டாளர்களுக்கு நான் எல்லாத் தருணங்களிலும் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வெளிப்படையான நிர்வாகம் நடக்கிறது. முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய நல்லாட்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில்தான் இன்று உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். உங்கள் எதிர்காலத் தொழிற்சாலைகளையும் தமிழ்நாட்டிற்கே கொண்டு வாருங்கள். உங்கள் புதிய முதலீடுகளையும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செய்யுங்கள். தமிழ்நாட்டு இளைஞர்களின் திறனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! என உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் திறந்த மனதுடன் செய்து தந்திட இந்த அரசு என்று கூட சொல்லமாட்டேன், நம் அரசு தயாராக இருக்கிறது என்ற அந்த உறுதியைச் சொல்லி, செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் இப்புதிய திட்டம் நன்கு செழித்து, வெற்றி பெற வேண்டும் – மற்ற மாவட்டங்களுக்கும் இது பரவ வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை மனதார என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in